செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
“மொழிகள் பல; உணர்வு ஒன்றே”

# பாரத மொழிகளின் திருவிழா - 2023

## மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி

## கலை மற்றும் அறிவியல், பொறியியல் கல்லூரிகள் விண்ணப்பிக்கலாம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் “பாரத மொழிகளின் திருவிழா”வினை முன்னிட்டுக் கருத்தரங்குகள், பயிலரங்குகள் ஆகிய கல்விசார் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. அவற்றின் ஒரு பகுதியாக மத்தியக் கல்வி அமைச்சகத்தின் **“பாரதிய மொழிக் குழு” (Bharatiya Bhasha Samithi)** வழிகாட்டுதலின்படி, மகாகவி பாரதியாரின் பிறந்தநாளை (டிசம்பர், 11) முன்னிட்டுக் கல்லூரிகளில் பேச்சுப் போட்டியை நடத்த வேண்டுமென்ற திட்டத்தைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செயல்படுத்த முனைந்துள்ளது.

பாரதியின் படைப்புகளில் மொழி, நாடு குறித்த சிந்தனைகள் மிகுதியாக வெளிப்பட்டுள்ளன. இந்திய நாட்டின் ஒருமைப்பாடு பாரதியார் பாடியுள்ள தேசியப் பாடல்களின் அடிநாதமாக விளங்குகின்றது.

**முப்பது கோடி முகமுடை யாளுயிர்**
**மொய்ம்புற வொன்றுடை யாள் – இவள்**
**செப்பு மொழிபதி னெட்டுடை யாள் – எனில்**
**சிந்தனை ஒன்றுடை யாள்.**

என்று மொழி, மாநிலப் பாகுபாடுகளைக் கடந்து நாட்டின் ஒருமையையும் உறுதியையும் போற்றின பாரதி பாடல்கள்.

சிந்தையிலாயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்த இந்நாடு, சீரழிந்து, நெறிதவறிக் கெட்டுத் தாழ்வுற்றிருந்த நிலை கண்டு மனம் வெதும்பிய பாரதியார், அண்டிப் பிழைக்கும் அடிமை வாழ்வை அகற்றி, தொண்டு நிலையைத் தூவென்று தள்ளி, தாயின்

மணிக்கொடியைத் தாங்கி நின்று, ஒன்றுபட்ட வாழ்வு கண்டு, புதிய பாரதம் படைக்க அழைப்பு விடுக்கின்றார். அந்தப் பாரதத்தில், பிறப்பால் உயர்வு தாழ்வு இராது; சாதியில் இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இராது; நேர்மையானவர் மேலோர், நேர்மையற்றவர் கீழோர் என்பதே நாட்டில் நிலவும் நெறியாகப் பாரதி வலியுறுத்தும் ஒருமைப்பாடு ஆகும்.

நாட்டின் வளர்ச்சிக்காகத் திட்டமிடும்போது மொழிச் சிந்தனையோடு திட்டமிட வேண்டும். அதாவது பயன்பாட்டிற்கான மொழிகளைத் தேர்ந்தெடுத்தல் அவற்றை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றிற்குச் சில கொள்கைகள் உருவாக்கப்பட்டு அவற்றின் வாயிலாகப் பல்வேறு சமுதாயப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. அந்தவகையில்,

**வங்கத்தின் ஓடிவரும் நீரின் மிகையால்**
**மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்**

என்றும்

**கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்**
**காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்**

என்றும் பாரதி பாடியது ஒருமைப்பாட்டுச் சிந்தனையின் உச்சமாக அமைகின்றது.

முப்பது கோடி மக்களைக் கொண்டுள்ள நாடு, பேசும் மொழிகள் பதினெட்டினைக் கொண்ட நாடு பாரத நாடு என்று சொல்லி, இவ்வளவு வேறுபாட்டிற்கிடையேயும், சிந்தனை ஒன்றுடைய நாடு என்பதன்மூலம் நாட்டின் முழுமையையும் ஒருமைப்பாட்டையும் வலியுறுத்துகிறார் பாரதி. இதுதான் பாரதி பகரும் தேசியம். பாரதி மற்றோரிடத்தில்,

**இந்தியா என்ற நின்றன்**
**கண்ணொத்த பேருரைத்தக் கால்**

என்று சொல்லி கண்ணினைப் போன்றது இந்தியா என்று குறிப்பிட்டு அதன்மூலம் நாட்டின் முழுமையான அமைப்பினையும் அது எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதும் தேசியம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான்.

**பாருக்குள்ளே நல்லநாடு – எங்கள்**
**பாரத நாடு**

என்றும்,

**பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்**

என்றும் கூறிப் பாரதம் என்ற சொல்லினைப் பயன்படுத்தியுள்ளதோடு மட்டுமல்லாமல் நாட்டு வணக்கம் என்ற கவிதையில்,

**எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்தது இந்நாடே – அதன்**
**முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து**
**முடிந்ததும் இந்நாடே – இன்னுயிர்**
**தந்துஎமை யீன்றுவளர்த்து அருள்**
**ஈந்ததும் இந்நாடே.**

என்று பாடி நாட்டுக்கு ஏற்றம் செய்துள்ளார். இத்தகைய பாரத நாட்டின் ஏற்றத்திற்கு ஆண், பெண் என்ற பாகுபாடு இருத்தல்கூடாது. ஆதலின்

**இளைய பாரதத்தினாய் வா வா**
**உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா**

என்று பாடினார்.

தணியாத தமிழ்க் காதல் நாட்டுப் பற்றாய்க் கனிந்து, விடுதலை வேட்கையாக வளர்ந்து, அரசியல் தனித்தன்மையுடன் ஆன்ம விடுதலையும் எய்தி, நீதியும் நேர்மையும் நிலவும் சமுதாயத்தைச் சமைத்து, தாய் நாட்டோடு மட்டுமல்ல, தரணிமுழுவதும் மனித இனத்துடன் ஒருமைப்பட்டு, உலக மக்களோடு மட்டுமின்றி உயிரினங்கள் அனைத்துடனும் உறவு கொண்டு, அறத்தால் ஆட்சி செய்து, மாந்தநேய மாண்பு பெற்று, புதியதோர் உலகு படைக்க தம் பாட்டால் பாதை வகுத்த மகாகவி பாரதியின் சிந்தனைகளை எதிர்வரும் தலைமுறையினருக்குக் கொண்டுசெல்வது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் தலையாய கடமையாகும்.

பாரதியார் வலியுறுத்தும் தேசிய ஒருமைப்பாட்டுச் சிந்தனையை எதிர்வரும் தலைமுறையினர் அறிந்துகொண்டு செயலாற்ற வேண்டும் என்ற நோக்கில் இந்தப் பேச்சுப் போட்டியைக் கல்லூரிகள் நடத்தவேண்டுமெனச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகளும் விவரங்களும் வருமாறு:**

- கல்லூரிகளே பேச்சுப் போட்டியை நடத்திக்கொள்ள வேண்டும்.
- “பாருக்குள்ளே நல்ல நாடு, எங்கள் பாரத நாடு” என்ற தலைப்பு பேச்சுப் போட்டியின் மையக் கருவாக அமைய வேண்டும்.

- இளங்கலை, இளம் அறிவியல், இளம் பொறியியல் மாணவர்கள் மட்டுமே பேச்சுப் போட்டியில் பங்கேற்க வேண்டும்.
- எந்தக் கல்லூரி பேச்சுப் போட்டியை நடத்துகிறதோ அந்தக் கல்லூரி மாணவர்கள் மட்டுமே போட்டியில் பங்கேற்க வேண்டும்.
- பாரதியாரின் பிறந்த நாளான டிசம்பர் 11 (2023) அன்று போட்டியை நடத்தி, பரிசுகளை வழங்க வேண்டும்.
- பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ. 5,000/-, இரண்டாம் பரிசு ரூ. 3,000/-, மூன்றாம் பரிசு ரூ. 2,000/- என்ற முறையில் பரிசுத்தொகை வழங்கப்பட வேண்டும்.
- பரிசுத் தொகை ரூபாய் 10,000/-, பரிசு வழங்கும் விழா நடத்துவதற்கான செலவினத் தொகை 10,000/- ரூபாயைச் சேர்த்து, மொத்தம் 20,000/- ரூபாய் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும்.
- பேச்சுப் போட்டியை நடத்த விரும்பும் கல்லூரிகள் கீழே உள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து 30.11.2023க்குள் அனுப்பிவைக்க வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்படும் கல்லூரிக்கு 01.12.2023 அன்று தகவல் தெரிவிக்கப்படும்.
- விண்ணப்பம் அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி office@cict.in

**இயக்குநர்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

## பாரத மொழிகளின் திருவிழா - 2023

## மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி

### விண்ணப்பப் படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்லூரியின் பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | தங்கள் கல்லூரி எந்த வகையைச் சார்ந்தது (கலை/கலை மற்றும் அறிவியல்/ பொறியியல்) | | |
| 3. | கல்லூரி தொடங்கப்பட்ட நாள்/ஆண்டு | | |
| 4. | இளங்கலை/இளம் அறிவியல்/இளம் பொறியியல் மாணவர்களின் எண்ணிக்கை | | |
| 5. | கல்லூரி முகவரி (தொலைபேசி எண்) | | |
| 6. | மின்னஞ்சல் முகவரி | | |
| 7. | புலன எண் | | |

நாள்:

இடம்:

**முதல்வரின் கையொப்பம்**

**(உரிய முத்திரையுடன்)**